(2024-25-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE 24 UTM 407**

**REG.NO:**

## என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி ) :: பொள்ளாச்சி

## பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2026

பி. ஏ. தமிழ் இலக்கியம் மதிப்பெண்கள் : 75

நான்காம் பருவம் நேரம் : 3 மணி

பகுதி – 3

## பொருளிலக்கணம் (அகப்பொருள், புறப்பொருள்)

**பகுதி – அ** **(10x1=10** மதிப்பெண்கள்)

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (K1)

1. நம்பி அகப்பொருள் எத்தனை இயல்களைக் கொண்டுள்ளது?

   அ) நான்கு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஒன்று

2. முல்லை நிலத்திற்குரிய தெய்வம் தேர்க…………………

   அ) முருகன் ஆ) கொற்றவை இ) திருமால் ஈ) இந்திரன்

3. நற்சொல் கேட்டலாவது ........

   அ) வேய் ஆ) செலவு இ) புறத்திறை ஈ) விரிச்சி

4. இரண்டு நாடுகளும் தன் முழு வலிமையைக்காட்டி எதிர் நின்று போரிடும் நிலை …..

   அ) தும்பை ஆ) வஞ்சி இ) வெட்சி ஈ) கரந்தை

5. வெற்றி பெற்ற வீரர் சூடிக்கொள்ளும் பூ ……..

   அ) கரந்தைப்பூ ஆ) வாகைப்பூ இ) வஞ்சிப்பூ ஈ) வெட்சிப்பூ

**கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.** (K2)

6. முதற் பொருளாவது யாது?
7. குறி எத்தனை வகைப்படும்?
8. ஆநிரைகளை மீட்டுச் செல்வோர் சூடும் மலர் எது?
9. தான் தற்புகழ்தலுக்கு என்ன பெயர்?
10. பாடப்படும் ஆண் மகனது சிறப்பைக் கூறும் திணை எது?

**பகுதி – ஆ ( 5 X 5 = 25** மதிப்பெண்)

கீழ்க்காணும் வினாக்களுக்கு இரு பக்க அளவில் விடை தருக. **(K3)**

11. அ) அகத்திணையியலில் அறத்தொடு நிற்றல் பெறும் இடம் யாது?

**(**அல்லது**)**

ஆ) வாயில்களுக்குரிய செயல்களைக் கூறுக

(த.பி.பா.)

*ETHICAL PAPER*

12. அ) இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம் பற்றி எழுதுக.

**(**அல்லது**)**

ஆ) ஒருவழித்தணத்தல் நிகழ்வதற்கான காரணங்களைக் கூறுக.

13. அ) கரந்தைப் படலத்தின் துறைகளைக் கூறுக.

**(**அல்லது**)**

ஆ) வெட்சித் திணையின் கொளுவினை விளக்குக.

14. அ) வஞ்சிப்பூ சூடும் வீரர்களின் பல்துறைச் செயல்பாடுகள் யாவை?

**(**அல்லது**)**

ஆ) பின்வரும் துறைகளை விளக்குக. 1. மூதின் முல்லை 2. அவிப்பலி

15. அ) முல்லை என்று முடிகின்ற வாகைத் துறைகளைப் பட்டியலிடுக.

**(**அல்லது**)**

ஆ) குறிப்பு வரைக. 1. நாள் மங்கலம் 2. புலவராற்றுப்படை

**பகுதி – இ ( 5 X 8 = 40 மதிப்பெண் )**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) கட்டுரை வடிவில் விடையளிக்க. (K4 (Or) K5)**

16. அ) அன்பின் ஐந்திணையின் முப்பொருள்களைக் கட்டுரைக்க.

**(**அல்லது**)**

ஆ) கற்பில் நிகழும் பிரிவுகளை விரித்துரைக்க.

17. அ) எண் வகை மனங்களுள் களவினது இயல்பு பற்றி விரித்துரைக்க.

**(**அல்லது**)**

ஆ) களவில் பாங்கி மதி**யுடம்பாட்டின்** நுட்பங்களை விவரி.

18. அ) மறத்திலும் அறம் போற்றும் தமிழரின் மாண்பை**க் குறித்துக்** கட்டுரை வரைக.

**(**அல்லது**)**

ஆ) வெட்சித் திணையின் துறைகளை விளக்கி எழுதுக.

19. அ) தும்பைத் திணை வீரர்களின் செயல்பாடுகளை விளக்கி உரைக்க.

**(**அல்லது**)**

ஆ) மண்ணாசை காரணமாக அரசன் மேற்கொள்ளும் முயற்சிகளை விவரி.

20. அ) போர் நிகழ்வுகளில் பாடாண் திணையின் தேவைகளை எழுதுக.

**(**அல்லது**)**

ஆ) வெற்றி பெற்ற மன்னரின் செயல்பாடுகளை வாகைப் படலம் வழி விளக்குக.

*ETHICAL PAPER*

************************